## 18

# அழிக்கப்பட முடியாதிருந்த ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 11:1–13:25)

*நாம் எலிசாவின் வாழ்க்கையில் இறுதி ஆண்டுகளினூடே விரைவாக கடந்து போகிறோம். 2 இராஜாக்கள் 11ஆம் அதிகாரத்தில் அத்தாலியாள் யூதாவின் ஆட்சியை கைப்பற்றுவதையும், பின்பு யோவாஸ் தனக்குரிய இடத்தில் ராஜாவாக ஏற்படுத்தப்படுவதையும் குறித்து வாசிக்கிறோம். அதிகாரம் 12 யோசியா தேவாலயத்தையும் அதின் வழிபாட்டையும் மீட்டமைப்பதைக் கூறுகிறது. அதிகாரம் 13இல் நாம் மீண்டும், எலிசா தன் ஊழியத்தை செய்து கொண்டிருந்த, வட இராஜ்யமாகிய இஸ்ரவேலின் கதையை எடுக்கிறோம். யெகூ மரித்தபோது, அவன் மகன் யோவாகாஸ் இஸ்ரவேலின் ராஜாவாக முடிசூட்டப்பட்டான் (13:1; காண்க 10:35). பதினேழு ஆண்டு கால ஆட்சிக்குபின், யோவாகாஸ் மரித்தான்; பின் அவன் மகன் யோவாஸ்[1] ராஜாவானான் (13:9). யோவாஸ் பதினாறு வருஷம் அரசாண்டு, "கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" (13:11). அந்த பத்தாண்டுகளில் எலிசா குறிப்பிடப்படவில்லை. எப்படியிருப்பினும், "போராட்ட காலங்களுக்கான தேவனுடைய மனிதர்" பணி ஓய்வு பெற்றிருக்கவில்லை. அவர் தொடர்ந்து தன் ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்ற ஒரு ஆலோசனையை நான்முன் வைக்கிறேன். இரண்டு உண்மைகளின் அடிப்படையில் நான் இந்த முடிவுக்கு வருகிறேன்:*

- *நமது முந்திய படிப்புகளில், எலிசாவின் குணாதிசயம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்கும்போது, அவர் பணியை விட்டு விடக்கூடிய ஒரு மனிதராக தெரியவில்லை.*
- *எலிசா தன் வாழ்க்கையின் முடிவை நெருங்கினபோது, யோவாஸ் ராஜா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே!" என்று குறிப்பிட்டான் (13:14ஆ). இந்த வார்த்தைகள் எலிசா தொடர்ந்து தேசத்தின் ஆவிக்குரிய ஆலோசகராக (தகப்பன்) மற்றும் தேவனுடைய பாதுகாப்பு முகவராக ("இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமானவர்") இருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.*

*எப்படியிருப்பினும், எவ்வளவு பெரிய ஒரு வாழ்க்கையாக இருந்தாலும், அது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் (காண்க எபிரெயர் 9:27அ). இந்த பாடத்தில், தீர்க்கதரிசியின் வாழ்க்கையின் அஸ்தமனத்தை நாம் காண்போம் - அது எவ்வளவு பிரமிக்கத்தக்க அஸ்தமனமாக இருந்தது![2] நான் இந்த இறுதி பாடத்தை "அழிக்கப்படமுடியாதிருந்த ஒரு மனிதன்" என அழைக்கிறேன்.*

# அவர் மரித்து கொண்டிருந்தார், ஆனால் இன்னமும் தேவனுடைய தீர்க்கதரிசன மனிதராயிருந்தார் (13:14-19)

இந்த கதை துவங்குகையில், "எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்" (வசனம் 14அ). அவர் எண்பது மற்றும் தொண்ணூறு வயதுக்கு இடைப்பட்டவராக இருந்தார்.[3] அவருடைய வியாதி, வயது முதிர்ந்தவர்களை பாதிக்கக் கூடிய வியாதிகளில் ஒன்றாக இருந்திருக்கக் கூடும்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ்" கரிசனப்பட்டு, "அவனிடத்திற்கு போனான்" (வசனம் 14ஆ). எலிசா எங்கிருந்தார் என்பது நமக்கு தெரிவதில்லை, ஆனால் அவர் சமாரியாவிலிருந்து சற்று தொலைவில் இருந்திருக்கலாம். சம்பிரதாயப்படி, ராஜாக்கள் மக்களிடம் செல்லமாட்டார்கள்; மக்கள் அவர்களிடத்தில் வரவழைக்க கூடுவார்கள். யோவாஸ் பயணம் செய்து போய் எலிசாவை பார்த்தது, தீர்க்கதரிசியின்மேல் அவன் வைத்திருந்த மரியாதையைக் காட்டுகிறது.

யோவாஸ் எலிசாவின் படுக்கை அருகே வந்து, "அவன் மேல் விழுந்து, அழுது,[4] என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே!" என்றான் (வசனம் 14இ). எலியா இந்த உலகத்தைவிட்டு பிரிந்து சென்றபோது, எலிசாவால் பேசப்பட்ட அவனுடைய வார்த்தைகளை எதிர் ஒலித்தன (2:12). அந்த வார்த்தைகள் எலியாவைப் போல், எலிசாவும் தேசத்திற்கு பெலனாக இருந்தார் என்பதை அங்கீகரித்தது. இருப்பினும், எலியாவை போல, எலிசா தனக்குப்பின்வரும் ஒருவரை விட்டுச்செல்லவில்லை. ராஜாவின் வாக்கியத்தில் உணர்த்தப்படும் கேள்வி என்னவென்றால்: "நாங்கள் இப்போது என்ன செய்வது?"

எலிசா தன் பெலத்தை இழந்த நிலையிலும், தன்னுடைய மரணம் என்பது தேவன் தம்முடைய ஜனங்களோடும் இனிமேலும் இருப்பதில்லை என பொருள்படாது என்பதை உறுதிசெய்கிறார். எலிசா இதை ஒரு அடையாள செயல் மூலம் செய்தார் (தீர்க்கதரிசிகள் அடிக்கடி செய்தபடியாக; காண்க நடபடிகள் 21:10, 11). அவன் ராஜாவை நோக்கி, "வில்லையும் அம்புகளையும் பிடியும்" என்றான் (2 இராஜாக்கள் 13:15அ). ஆயுதமணிந்தவர்கள் ராஜாவோடு வந்திருப்பார்கள். இவர்கள் ஒருவனிடத்திலிருந்து வாங்கி, யோவாஸ் "அப்படியே வில்லையும் அம்புகளையும் பிடித்தான்" (வசனம் 15ஆ).

எலிசா யோவாசை நோக்கி, "உம்முடைய கையை வில்லின் மேல் வையும்" என்றான் (வசனம் 16அ). வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், "எய்யத்தக்க நிலையில் வில்லை பிடித்துக் கொள்" என்று கூறலாம். ராஜா இப்படியாக வில்லை பிடித்திருக்கையில், "எலிசா தன் கைகளை ராஜாவுடைய கைகளின் மேல் வைத்து ..." (வசனம் 16ஆ). தீர்க்கதரிசி இதை செய்வதற்கு எழுந்து நிற்க தள்ளாடினாரா? அல்லது ராஜா எலிசா தன் தளர்ந்த கைகளை இளவயது மனிதனுடைய கைகளின் மேல் வைக்கத்தக்கதாக அவன் அவருடைய படுக்கையருகில் முழங்காலில் நின்றானா? எனக்கு தெரியாது - ஆனால் யெகோவாவின் உதவியில்லாமல் யோவாஸ் எதிரிகளை தோற்கடிக்க முடியாது என்பதை இந்த செய்கை வலியுறுத்தியது. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"

என்று பின்னாளில் ஒரு யூத தலைவருக்கு சொல்லப்பட்டது (சகரியா 4:6).

எலிசா அங்கிருந்த ஒருவனை நோக்கி, "கிழக்கே இருக்கிற ஜன்னலை திறவும்" என்றான் (2 இராஜாக்கள் 13:17அ). "கிழக்கே இருக்கிற" என்பது ஆசகேல் இஸ்ரவேலரிடமிருந்து கைப்பற்றிய, யோர்தானுக்கு கிழக்கு திசையிலிருக்கிற பகுதியாக இருந்திருக்கலாம் (காண்க 10:32, 33). ஜன்னல் கள் திறக்கப்பட்டபோது, எலிசை ராஜாவை பார்த்து "எய்யும்!" என்று கட்டளையிட்டான். அவன் "எய்தான்" (13:17ஆ).

பின்பு தீர்க்கதரிசி, "அது கர்த்தருடைய ரட்சிப்பின் அம்பும், சீரியரினின்று விடுதலையாக்கும் ரட்சிப்பின் அம்புமானது; நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறிய அடிப்பீர்" என்றான் (வசனம் 17இ). ராஜாவுக்கு சொல்லப்பட்ட செய்தி இரண்டு வகையாக இருந்தது: முதலாவது, அவன் எதிரியை தாக்குவதில் ஒரு அம்பு எய்வது போல, தைரியமாயிருக்க வேண்டியிருந்தது (ஒப்பிடுக யோசுவா 8:18). இரண்டாவதாக, அவன் அவ்விதம் செய்வானானால், கர்த்தர் அவனுக்கு வெற்றியை கொடுப்பார். ஆப்பெக்கில் வெற்றி என்பது குறிப்பாக சொல்லப்பட்டது. ஆப்பெக் என்பது சமாரியாவிலிருந்து தமஸ்கு செல்லும் வழியில், கலிலேயாக் கடலின் கிழக்கே சில மைல்கள் தொலைவில் அமைந்தி ருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்கள்* என்ற வரைபடத்தை காணவும்). ஒரு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், ஆகாப் ஆப்பெக்கிலே சீரியருக்கெதிரான ஒரு யுத்தத்திலே பெரிய வெற்றி பெற்றான் (1 இராஜாக்கள் 20:26-30).

தேவன் வெற்றியை வாக்குத்தத்தம் செய்தார் - ஆனால் தேவனு டைய வாக்குத்தத்தங்கள் - வார்த்தைகளினால் சொல்லப்பட்டிருந்தாலும் அல்லது உணர்த்தப்பட்டிருந்தாலும் - நிபந்தனைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. எலிசா ராஜாவை நோக்கி, "அம்புகளை பிடியும்" என்றான் (2 இராஜாக்கள் 13:18அ). அவைகள் அம்பறாத்தூணியிலிருந்த அம்புகளாக இருந்திருக்கலாம். பின்பு தீர்க்கதரிசி ராஜாவை நோக்கி, "தரையிலே அடியும்" என்றுன் (வசனம் 18ஆ).[5]

ராஜா இந்த அறிவுரையினால் குழம்பிப்போயிருந்தானா? அவன் அம்புகளை எடுத்து, "தரையிலே மூன்று தரம் அடித்து நின்றான்" (வசனம் 18இ). அவன் மூன்று தரம் அடித்து நிறுத்தியபோது, "தேவனுடைய மனுஷன் அவன் மேல் கோபமாகி; நீர் ஐந்து ஆறு விசை அடித்தீரானால், அப்பொழுது சீரியரைத் தீர முறிய அடிப்பீர், இப்பொழுதோ சீரியரை மூன்றுவிசைமாத்திரம் முறிய அடிப்பீர்" என்றான் (வசனம் 19).[6]

"அது நியாயமல்ல, எத்தனை முறை தரையில் அடிக்க வேண்டும் என்று எலிசா சொல்லவில்லை. அவன் தரையில் அடியும் என்று மட்டும் சொன்னான் மற்றும் ராஜா அவன் சொன்னபடி செய்தான். எலிசா கோபப்படவும் மற்றும் ராஜாவை தண்டிக்கவும் உரிமைபெற்றிருக்கவில்லை!" என நாம் சிந்திக்கலாம். அநேகமாக, ராஜா எலிசா நிறுத்தும் என்று சொல்லுகிறவரை தொடர்ந்து அடிக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார். யோவாஸ் "இந்த அம்புகளைப்பற்றிய நிகழ்ச்சிக்கும்" அவன் சீரியரை ஜெயிக்க முடியுமா அல்லது ஜெயிக்க முடியாதா என்பதற்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை என நினைத்தானா? அவன், "வயதான மனிதனின் விளையாட்டை விளயாடுவதில் சோர்வுற்றுனா"? அவன் தன் மனிதர் முன்பாக "இப்படிப்பட்ட ஒரு மதியீனமான காரியத்தை"

செய்வதற்கு சங்கடப்பட்டானா? யோவாஸின் இருதயத்தை நாம் அறிவதில்லை, ஆனால் தேவன் அறிந்திருந்தார். ராஜாவின் வெற்றிகளை எது மட்டுப்படுத்தியது? அவனுடைய அளவிடப்பட்ட விசுவாசம், வைராக்கியம் மற்றும் விடாமுயற்சி தான் அவைகளை மட்டுப்படுத்தியது.

இந்த சம்பவத்திலிருந்து, "குறைந்த அளவு செய்தல்" என்ற ஆபத்தான பாடம் உட்பட, பல பாடங்களை நாம் எடுக்க முடியும். எப்படியிருந்தபோதிலும், தன் மரண படுக்கையில் கூட, எலியா தேவனுடைய தீர்க்கதரிசன மனிதனாக இருந்தார் என்பதை நான் வலியுறுத்தி கூற விரும்பிகிறேன். அவர், "சீரியரை மூன்று விசை மாத்திரம் முறிய அடிப்பீர்" என்றார் (வசனம் 19ஆ), மற்றும் அது அப்படியே நடந்தேறியது. ஆறு வசனங்கள் கழித்து, "மூன்று விசை யோவாஸ் அவனை (சீரிய ராஜாவை) முறிய அடித்து இஸ்ரவேலின் பட்டணங்களைத் திரும்பக் கட்டிக் கொண்டான்" (வசனம் 25ஆ) என்று நாம் வாசிக்கிறோம்.

## அவர் மரித்துப் போயிருந்தார், ஆனால் இன்னமும் தேவனுடைய வல்லமையின் மனிதராயிருந்தார் (13:20, 21)

யோவாஸ் பார்த்துச் சென்ற சிறிது காலம் கழித்து, "எலிசா மரணமடைந்தான்" (வசனம் 20அ). எலியா சுழல்காற்றில் உலகத்தை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தார். ஆனால் எலிசா அப்படிப்பட்ட ஒரு பிரமிப்பான விதத்தில் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மாறாக, அவர் மனுக்குலத்தின் பொதுவான மரணத்தை அவர் பகிர்ந்து கொண்டார் (காண்க எபிரெயர் 9:27அ). அவருடைய மரணத்திற்கு பிறகு, "அவனை அடக்கம் பண்ணினார்கள்" (2 இராஜாக்கள் 13:20ஆ). அடக்கத்தில் உடலை குளிப்பாட்டுவது, தூய வஸ்திரங்ளையும் மற்றும் வாசனை திரவியங்களையும் கொண்டு உடலை சுற்றிகட்டுவது போன்றவை அடங்கியிருந்தன. CJB மொழி பெயர்ப்பு, "அவர்கள் அவனை ஒரு கல்லறை குகையில் வைத்தார்கள்" என்று கூறுகிறது. "ஜொசிபஸின் கூற்றுப்படி, … அவனுடைய அடக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது."[7]

எலிசா மரிக்கும் காலத்தில், கொள்ளைக்காரர்கள் இஸ்ரவேலுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். "மறுவருஷத்திலே மோவாபியரின் தண்டுகள் தேசத்திலே வந்தது" (வசனம் 20இ). சீரியாவிலிருந்து தண்டுகள் வந்து இஸ்ரவேலை தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தார்கள் (5:2); இப்போது அவர்கள் மோவாபிலிருந்து வரும் கொள்ளையர்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது.[8]

ஒருநாள் ஒரு அடக்கத்தின் போது, துக்கங்கொண்டாடுபவர்கள் தூரத்திலே மோவாபியரின் தண்டுகள் இருப்பதை பார்த்தார்கள் (13:21அ). அவர்கள் தங்கள் உயிருக்கு பயந்து, தப்பி ஓட ஆயத்தப்பட்டார்கள். அவர்களுக்கு அடக்கத்தை முடிப்பதற்கு நேரம் இருக்கவில்லை, ஆனால் அவர்கள் உடலை தங்களோடு எடுத்துச் செல்லவும் முடியவில்லை, ஏனெனில் அது அவர்கள் வேகத்தை குறைத்துவிடும். அதே சமயத்தில் மோவாபியர்கள் அந்த உடலை அவமானப் படுத்தத்தக்கதாக, அதை அங்கேயே விட்டு செல்லவும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் விரைவாக அருகிலிருந்த ஒரு குகை கல்லறையின் முகப்பு

கல்லை புரட்டி தள்ளிவிட்டு, சடங்குகள் எதுவுமின்றி அந்த உடலை அதனுள் வைத்தார்கள் (13:21அ), முகப்பு கல்லை மீண்டும் புரட்டி வைத்துவிட்டு, அவர்கள் உயிர் தப்ப ஓடிப்போனார்கள்.[9]

சம்பவம் இவ்விதமாக நடக்கையில், அந்த குகை கல்லறை எலிசாவினுடையதாயிருந்தது. "அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின் மேல் பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்" (வசனம் 21ஆ).[10] அவனுடைய நண்பர்கள் பிற்பாடு அவனுடைய உடலை எடுத்துச்செல்ல வந்தபோது, அவர்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? பழைய ஏற்பாட்டில், மரித்தோரை உயிரோடே எழுப்புவது தொடர்பான மூன்று சம்பவங்கள் மட்டும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டு எலிசாவோடு தொடர்புடையவைகள், அவைகளில் ஒன்று எலிசா மரித்த பிற்பாடு நடந்தது! "யூதர்கள் இந்த அற்புதத்தை எலிசாவின் மிகப்பெரிய ஒரு மகிமையாக கருதினார்கள்."[11]

மறுபடியாக, இந்த சம்பவத்திலிருந்து பல பாடங்களை எடுத்து நம் வாழ்க்கைக்கு அவைகளை பொருத்தி பார்க்கலாம். அநேகமாக இது வசனப்பகுதியில் உள்ளடக்கப்பட்டிருப்பது, தீர்க்கதரிசியானவர் மரணம் அடைந்திருந்தாலும், அவர் சேவித்த தேவனானவர் மரிக்கவில்லை என்ற உறுதியை கொடுப்பதற்காக இருந்தது. இப்படியாக எலிசா வாக்குத்தத்தம் செய்த வெற்றி நிச்சயமானதாயிருந்தது. இருப்பினும், நான் இன்னொரு சத்தியத்தை வலியுறுத்தி கூறுவேன்: ஒரு மனிதன் செய்யக்கூடிய நன்மை என்பது இந்த உலக வாழ்க்கை பயணத்தோடு முடிவடைவதில்லை. ஒரு தேவபக்தியுள்ள மனிதனுடைய செல்வாக்கு என்பது அவனுடைய வாழ்நாளுக்கு அப்பாலும் தாண்டிச் செல்கிறது.

நீங்கள் மரித்த பிற்பாடு, உங்கள் எலும்புகள் மற்ற பிரேதங்களை தொட்டு அவைகளை உயிர்ப்பிக்காது; ஆனால் உங்கள் வாழ்க்கை தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததானால், நீங்கள் பேசின வார்த்தைகள் தொடர்ந்து இருதயங்களை தொட்டுக்கொண்டே இருக்கும். நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகள் பிறருடைய வாழ்க்கையை தொடும். உங்கள் தேவபக்தியுள்ள முன்மாதிரி உங்களை அறிந்தவர்களை தொடும் - மற்றும் வாழ்க்கை, ஆவிக்குரிய வாழ்க்கை பெலப்படுத்தப்பட்டிருக்கும். "அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று ஆபேலைக்குறித்து சொல்லப்பட்டதுபோல், உங்களைக் குறித்தும் சொல்லப்படக்கூடும் (எபிரெயர் 11:4ஆ).

## முடிவுரை

ரால்ப் வால்டோ எமர்சன் என்பவர், "ஒரு நாடு எப்படிப்பட்ட மனிதனை உருவாக்குகிறது என்பது தான் மனித இனத்திற்கான பரிசோதனையாயிருக்கிறது" என்று சொன்னார்.[12] ஜார்ஜ் டுரூட் என்பவர், "ஒழுக்கம் குணாதிசயம் ஒரு நாகரீகத்தில் முதன்மையானதாக உயர்த்தப்படாவிட்டால், அதின் வணிகம் எவ்வளவு ஆரவாரமுள்ளதாயிருந்தாலும் அல்லது பொருளியல் நடவடிக்கைகளில் அதன் சாதனைகள் எவ்வளவு ஆச்சரியமானவைகளாயிருந்தாலும், அந்த மனித சமூகம் சோகமானதாக மற்றும் விரைவாக தோற்றுப்போனதாகவே இருக்கும்" என்றார்.[13] இஸ்ரவேலின் வட இராஜ்யத்தில் ஒழுக்கம் உயர்த்திப் பிடிக்கப்படவில்லை, ஆனால் தேவன் அப்படிப்பட்ட ஒரு மனிதனை

உடையவராக இருந்தார்: போராட்ட நாட்களுக்கான அவருடைய மனிதர். நாம் இன்னமும் போராட்ட காலங்களில் நெருக்கடியான காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் - நமக்கு இன்னமும் எலிசாவின் குணாதிசயங்களையுடைய ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் தேவையாயிருக்கிறார்கள். டேல் கார்ட்மேன் என்பவர், "அசாதாரணமான குணாதிசயங்களையுடைய சாதாரண மனிதர்கள்" நமக்கு தேவையாயிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.[14] நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தேவன் நம்பத்தகுந்த ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணாக இருக்க தீர்மானியுங்கள்!

---

குறிப்புகள்

[1]மறுபடியுமாக, இஸ்ரவேலிலும் யூதாவிலும் அதே பெயரையுடைய ராஜாக்கள் இருக்கிறார்கள்: யோவாஸ் (யோவகாஸ்). [2]நீங்கள் கண்ட ஒரு அழகான சூரிய அஸ்தமனத்தை விவரிக்கலாம். [3]எலிசாவின் உண்மையான வயதை நாம் தீர் மானிப்பதற்கு, அவர் எந்த வயதில் எலியாவின் பயற்சி உதவியாளரானார் என்பதை அறிய வேண்டியிருக்கிறது. [4]என்னுடைய NASB வேதாகமத்தின் ஓரக்குறிப்பின்படி, அவன் "அவருடைய முகத்தின்" பக்கமாய் அழுதான். ராஜாவின் கண்ணீர் துளிகள் ஒருவேளை தீர்க்கதரிசியின் முகத்தின் மேல் விழுந்திருக்கலாம். [5]மூலமொழி, "அம்புகளை தரையில் எய்" என்ற அர்த்தத்தை கொடுக்கலாம். [6]சீரியரை மேற்கொண்டு, தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் பொருப்பு யெரோபெயாம் - II வுக்கு விடப்பட்டிருந்தது (2 இராஜாக்கள் 14:25, 28). [7]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary*, vol. 5, *1 & 2 Kings*, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 265; Josephus *Antiquities* 9.8.6. [8]ஒரு முந்தைய பாடம் மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக கலகம் செய்ததை குறிப்பிட்டிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 3:4, 5). [9]2 இராஜாக்கள் 13:21 ஆம் வசனத்தின் முதற்பகுதியிலே காணப்படும் குறிப்பை விவரித்து கூறும் முயற்சியாக இந்த பத்தி அமைந்துள்ளது. [10]செத்துப்போன ஒரு மனிதனின் எலும்புகளால் செய்யப்பட்ட ஒரு உண்மையான அற்புதத்தை பற்றிய ஒரு பதிவு இருப்பது இதுதான் முதல் முறை என்றும், இதுவே கடைசி முறை என்றும் நான் நம்புகிறேன்; இருப்பினும் இதின் பேரிலும் இது போன்ற பிற அற்புதங்களின் பேரிலும் அற்புதம் செய்வது தொடர்பான புனை கதைகள் [கத்தோலிக்க சபையால்] புனையப்பட்டுள்ளன. (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes*, vol. 2, *Joshua-Esther* [New York: Abingdon-Cokesbury Press, n.d.], 525.)

[11]Albert Barnes, "Kings," *The Bible Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1953), 264; quoted in James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings*, James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 171. [12]Quoted in George W. Truett, *The Prophet's Mantle* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1948), 19. [13]Ibid. [14]Dale Hartman, sermon preached at the Eastside church of Christ, Midwest City, Oklahoma, 21 December 2003.